[1990 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாவாகவே கேட்கலாமே. நீங்கள் மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி ; ஆகவே இன்றைக்கு முன்மாதிரியான ஒரு பால் பண்ணையாக, அதாவது பம்பாய் பால் பண்ணையைப் போல இங்கே அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆவின் நிறுவனத்திற்கு என்று தனியாக நிலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, மீதியிருக்கிற நிலம் தான் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. கடந்த காலத்தில் மாடுகளை வைத்து வளர்த்து, பால் வழங்கப்பட்டதால் அரசுக்கு மிகவும் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தால்தான், அந்த எண்ணம் கைவிடப்பட்டது. மேலும் முன் மாதிரியான பால் பண்ணை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மூன்றாவது பால் பெருக்கத் திட்டத்தின் கீழ் சோளிங்கரில் பால் பண்ணை அமைய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வள்ளுவர் கோட்டம்.

*5596—திரு. சா. கணேசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வள்ளுவர் கோட்டம் மேலும் பொலிவூட்டப்படுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, வள்ளுவர் கோட்டத்தின் ஒரு பகுதியிலே, திருக்குறள் ஆய்வு மையம் ஒன்றை அமைத்து, திருக்குறள் பற்றி அனைத்து மொழியிலும் வந்துள்ள புத்தகங்களைச் சேகரித்து நூல் நிலையம் அமைக்கவும், குறிப்பாக தமிழறிஞர்கள் மு.வ.வின் திருக்குறள் தெளிவுரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய குறளோவியம் போன்ற நூற்களை அரசே அச்சிட்டு இந்த வள்ளுவர் கோட்டத்தில் மலிவு விலையில் விற்பனை செய்யவும், அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 24]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கேள்வி, வள்ளுவர் கோட்டத்தை மேலும் பொலிவு படுத்துவதற்கான திட்டம் இருக்கிறதா என்பதுதான். அதையொட்டி கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சா. கணேசன் அவர்கள் வரவு செலவுத் திட்டத்தை நான் இங்கே படித்த போது அவையில் இருந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஒரு வேளை இல்லாவிட்டாலும் அந்தப் புத்தகத்தை மீண்டும் படித் திருப்பார் என்று நம்புகிறேன். தமிழ் உயர்மட்டக் குழு ஒன்றை இந்த அரசு நியமிக்க இருப்பதாகவும், வள்ளுவர் கோட்டம் உள்ளிட்ட பல மேம்பாடுகள் குறித்து அந்தக் குழு ஆய்ந்து அரசோடு ஒத்துழைத்து செயல்படும் என்றும் அந்த வரவு செலவுத் திட்ட உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வள்ளுவர் கோட்டத்தினுடைய முகப்பில், கன்னியாகுமரியில் அமைக்க இருக்கிற 133 அடி வள்ளுவர் சிலையைப் போல இங்கும் அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது 'குமரி'-க்கு மாத்திரம் தரப்படுகிற சிறப்பு. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 'குமரி'. (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, கலைஞர்கள் எப்போதுமே குமரியைப் பற்றி நல்ல எண்ணத்தோடு பார்ப்பது உண்டு என்பதற்கு இது ஒரு சான்று, எடுத்துக் காட்டு. (சிரிப்பு) அதோடு தொடர்புடைய ஒன்று. கலைஞர் அவர்கள் கையால் ஒரு பரிசைப் பெறுகிற பாக்கியம் எனக்கு வள்ளுவர் கோட்டத்தில் கிடைத்தது. அந்த நேரத்தில் திருக்குறள் ஒலிப்பதிவு நாடாக்களை நல்லிசையோடு காற்றில் மிதந்து வருகிற அளவுக்கு ஏதாவது ஒரு நேரத்தில் ஒலி பரப்புவதாக முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருநாள் காலையிலோ மாலை நேரத்திலோ நம்முடைய குமரி அவர்கள் வள்ளுவர் கோட்டம் பக்கம் உலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். காலையிலும் மாலையிலும் அங்கே குறள் ஒலித்துக் கொண்டிருக்கிறது.